


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 06.10.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் நிகழ்வுகள்











We Shine Academy™

## தமிழக நிகழ்வுகள்

- மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் **7வது பொருளாதாரக் கணக்கெடுப்பை** நடத்துகிறது.
  - இந்தக் கணக்கெடுப்பு தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான டிஜிட்டல் முறையில் தகவல்களைத் திரட்டி சரிபார்த்து வெளியிடவுள்ளது. தமிழ்நாட்டில் இந்தக் கணக்கெடுப்பை, **ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்**, வரும் 9ஆம் தேதி தொடங்கி வைக்கிறார்.
  - 1977 தொடங்கி 2013 வரை பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆறு முறை நடந்துள்ள நிலையில், 7வது கணக்கெடுப்பு இந்த ஆண்டு நடைபெறுகிறது.

- அரசுப்பள்ளி ஆசிரியர்களின் கற்றல் செயல்பாடுகளை **செல்லிடப்பேசி செயலி** மூலம் கண்காணிக்க பள்ளிக் கல்வித்துறை முடிவு செய்துள்ளது.
  - இதன் மூலம் வகுப்பறைகளில் கற்பிக்கும் வழிமுறைகள், மாணவர்களின் கற்றல் திறன், மாணவர்கள் எழுப்பிய கேள்விகள், சந்தேகங்களுக்கு விடையளித்தல், வகுப்பறை மேலாண்மை, பதிவேடு பராமரித்தல், செயலியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதை மாவட்ட கல்வி அதிகாரிகள் மதிப்பீடு செய்து பள்ளிக் கல்வி இயக்குனரகத்துக்கு தெரியப்படுத்துவர்.

## தேசிய நிகழ்வுகள்

- **வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா,** பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கிடையே **கலாச்சாரம், கல்வி, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் 7 ஒப்பந்தங்கள்** கையெழுத்தாகின.
  - அஸ்ஸாம் தேசிய குடிமக்கள் பதிவேடு (என்ஆர்சி) விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடியிடம் ஷேக் ஹசீனா முறையிட்டார். என்ஆர்சி கணக்கெடுப்பு உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்பேரில் நடத்தப்பட்டதாகவும், அது குறித்து மத்திய அரசு இறுதி முடிவு எதுவும் இன்னும் எடுக்கவில்லை

எனவும் பிரதமர் மோடி அவரிடம் கூறியதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி **75கிலோ பிரிவில்** இந்திய வீராங்கனை **ஸ்வீட்டி போரா வெற்றி** பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.
  - **ரஷியாவின் உலன்உடே** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் ஜமுனா போரோ முதல் வெற்றியை ஈட்டியிருந்தார்.

- மும்பையில் நடைபெற்று வரும் உலக யூத் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பிரணவ் ஆனந்த் மகளிர் சர்வதேச மாஸ்டர் ரஷிதா ரவி ஆகியோர் வெற்றி கண்டனர்.
  - 14 வயது மகளிர் பிரிவில் ரஷிதா பெலாரஸின் போலியாகோவாவை வீழ்த்தி **4.5 புள்ளிகளுடன் முன்னிலை** பெற்றுள்ளார். திவ்யா தேஷ்முக் 3.5 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

## அறிவியல் நிகழ்வுகள்

- உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு பெண் ரோபோட் சோபியா சர்வதேச பள்ளிகள் மாநாட்டில் பங்கேற்பு – உலக பிரச்சனைகள் குறித்து பேச்சு.
  - **மத்தியப்பிரதேசத்தின் இந்தூரில் 55 நாடுகளைச் சேர்ந்த பள்ளிகளின் பிரதிநிதிகள்** பங்கேற்ற சர்வதேச ரவுண்ட் ஸ்கொயர் மாநாட்டில் ரோபோட் சோபியா உரையாற்றியது.
  - பருவநிலை மாறுபாடு, மின்சார சிக்கனம், பிளாஸ்டிக் ஒழிப்பு உள்ளிட்டவை குறித்த சோபியாவின் பேச்சு, மாநாட்டில் பங்கேற்ற பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தது.

- பே-டிஎம் நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு இடங்களில் வைஃபை வசதியை இந்திய அரசின் பொதுத்துறை தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல் நிறுவனம் கொடுக்க

இருக்கிறது.

- "**டிஜிட்டல் மற்றும் கனெக்டட் இந்தியா**" திட்டத்தை ஊக்கப்படுத்தும் விதமாக இந்த திட்டம் இருக்கும் என்று பிஎஸ்என்எல்-ன் இயக்குநர் விவேக் பன்ஸால் தெரிவித்துள்ளார்.

We Shine Academy™